புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# பெரும்பாணாற்றுப்படையில் மனிதநேயப் பண்புகள்

ஆய்வாளர்

**கி. ஜெனார்லின்**

முனைவர் பட்ட ஆய்வாளர்,

பதிவு எண் : 18113114022015

தமிழாய்வு மையம், நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,

மார்த்தாண்டம் – 629165.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

**நெறியாளர்,**

**முனைவர் ஞா. மேகலின் சந்திரா**

உதவிப்பேராசிரியர்

தமிழாய்வு மையம்,

நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம் – 629165.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

சங்க இலக்கியமான பத்துப்பாட்டு நூல்களில் ஐந்து ஆற்றுப்படை நூல்கள் ஆகும். ஆற்றுப்படை நூல்களுள் ஒன்று பெரும்பாணாற்றுப்படை. வள்ளல்களை நாடிப் பரிசில் பெற்று மகிழ்வோடு திரும்பிய பாணரும், கூத்தரும், பொருநரும், விறலியரும், தம்மை ஒத்த கலைஞர் எதிர்பட்ட போது அவர்களும் தாம் பெற்ற இன்பத்தைப் பெறவேண்டுமென்று விழைந்து தமக்குப் பரிசில் நல்கிய வள்ளல்களை அடைவதற்குரிய வழிகளையும் பாராட்ட வேண்டிய முறைகளையும் அவர் பரிசிலின் சிறப்பினையும் பிறசெய்திகளையும் எடுத்துக் கூறுவனவாகவே ஆற்றுப்படை நூல்கள் அமைகின்றன.

**மனிதநேயம்**

மனிதன் பிறந்தது முதல் மண்ணில் மறையும் வரை அவனுள் நிலைபெற்று தன்னைப் போல் பிறரையும் நினைக்கின்ற உணர்வின் வெளிப்பாடே மனிதநேயம் ஆகும். பறவைகளும்,

*விலங்குகளும் பிறரைப் பற்றி கவலைப்படுவதில்லை. அவை தம்முடைய பசியைத் தீர்ப்பது ஒன்றையே நோக்கமாகக் கொண்டுள்ளன. அவைகளின் வாழ்வில் எந்தவொரு மாற்றத்தையும் காணமுடியாது. ஆனால் மனிதனுடைய வாழ்வு நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வருகின்றது. ஒரு காலத்தில் விலங்குகளைப் போல வாழ்ந்த மக்கள் நாளடைவில் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்தனர். இவ்வாறு மக்கள் முன்னேறியதற்குக் காரணம் ஒருவருக்கொருவர் ஒற்றுமையோடும் மனித நேயத்தோடும் இருந்ததால் என்று கூறலாம். தான் துன்புற்ற நிலையிலும் பிறர் துன்பத்தைப் போக்கவேண்டும் என்ற மனப்பான்மை பழந்தமிழர்களிடம் மேலோங்கி இருந்தது எனலாம். இப்பண்புகள் தான் மனித இனத்திற்குரிய சிறந்த குணமாகும். உலகில் உள்ள பிறப்புக்களில் எல்லாம் மானிடப் பிறப்பு மகத்தானதாகும்.*

*"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பார் ஔவையார்.*

***சங்க இலக்கியத்தில் மனித நேயம்***

*மனிதனாகப் பிறந்தவன் புகழ்பெற வேண்டுமானால் பலரும் போற்றக் கூடிய நல்ல காரியங்களைச் செய்யவேண்டும். நற்செயல்களைச் செய்து புகழ் பெறாத மனிதன் பிறந்தும் பயன் இல்லை. சங்கத்தமிழர்கள் இந்த நற்குணங்களைக் கொண்டிருந்தனர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் தெள;ளத் தெளிவாக நமக்குக் காட்டுகின்றன.*

*இன்று மனித நேயச் சிந்தனைகள் மக்கள் மத்தியில் பரவியிருந்தாலும், மனித இல்லங்களிலும், உள்ளங்களிலும் மனித நேயமானது பூத்துக் குலுங்கியிருந்தாலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்க இலக்கியங்கள் அனைவரும் போற்றத் தக்க மனிதநேய அறக்கருத்துச் சிந்தனைகளைப் பற்றி கூறிச் சென்றுள்ளது. மேலும் சங்கப் புலவர்கள் மன்னர்களுக்கும், மக்களுக்கும் மனித நேயத்தைப் போதித்து வந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.*

*சங்க இலக்கியங்கள் பழந்தமிழருடைய அகப்புற வாழ்வினை மிகவும் தெள;ளத் தெளிவாக எடுத்தியம்புகின்றது. மேலும், சங்க இலக்கியப் பாடல்கள் அனைவரும் உறவினர் என்ற தத்துவத்தை உணர்த்துவதோடு, மனித குலத்திற்கு நன்மைகள் புரிகின்ற போது நலமுடைய மாந்தர்களாக வாழ்ந்தனர் என்பதை உயர்த்துகிறது.*

*"உண்டாலம்ம விவ்வுலக மிந்திரர்*

*அமிழ்த மியைவதாயிமினு மினிதெனத்*

*தமியருமுண்டது மிலரே மினிவலர்*

*… … … … … …*

*தமக்கென முயலா நோன்றாள்*

*பிறர்கென முயலுந ருண்மையானே" (புறநானூறு பா.எண் 182)*

*தன்னலம் கருதாமல் பிறர்நலம் கருதியே வாழும் மனிதனே மனிதனாவான். சங்கத் தமிழர் உண்மைக்கும், நேர்மைக்கும் புறம்பாக வாழ்வதை வெறுத்து வைத்துள்ளனர். தனக்கென்று வாழாமல் பிறர்க்கென்று வாழும் மனிதர்களாக வாழ்ந்துள்ளனர்.*

*தன்னைப் போல பிறரை நேசிப்பதும் பிறர் படும் துன்பத்தில் தாமும் பங்கு பெறுவதும், பிறருக்கு உதவி செய்வதும் மனிதநேயப் பண்புகள் ஆகும்.*

*குளிரால் நடுங்கிய மயிலுக்கு போர்வை தந்த பேகனும், பற்றிடம் இல்லாமல் காற்றில் அசைந்த முல்லைக் கொடிக்கு தன் தேரைத் தந்த பாரியும், எல்லாவற்றையும் இழந்து மறைவான வாழ்க்கை நடத்தி வந்த நிலையிலும் தலையையே கொடுக்கத் துணிந்த குமணனும், புறாவின் துயரைத் தீர்ப்பதற்காக தன் சதையையே பருந்துக்கு இரையாகக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியும் மனிதநேயத்துக்கு சான்றுகளாக இருப்பதை இலக்கியங்கள் நமக்கு பறைசாற்றுகின்றன.*

***பெரும்பாணாற்றுப்படையில் மனிதநேயம்***

*பத்துப்பாட்டுள் நான்காவதாக இடம் பெற்றிருக்கும் நூல் பெரும் பாணாற்றுப் படை ஆகும். இப்பாட்டு 500 அடிகளைக் கொண்டதாகும். பண்டையக் காலத்தில் பாட்டுகளை பாடுவதற்கெனத் தனிக்குழுவினராக சிலர் பிரிந்திருந்தனர். அவர்களுள் இசையோடொன்றி இனிது பாடுவோரே பெரும்பாணர் ஆவர். இவர்களைக் குறித்து பாடிய பாடல்கள் பெரும்பாணாற்றுப்படை ஆகும். பெரும்பாணாற்றுப்படையில் அமைந்துள்ள மனித நேயச் செய்திகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.*

*பண்டைத் தமிழர்கள் மனிதத் தன்மையைக் காப்பாற்றுவதிலேயே முனைந்து நின்றனர். மனிதனை மனிதனாகக் கருதினர். மனித சமுதாயம் உயர்ந்த நிலையில் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று எண்ணினர். மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் குறிப்பிடத்தக்க உணவு, உடை, உறைவிடம் ஆகியனவற்றுள் மிகவும் இன்றியமையாதது உணவாகும். வறுமையில் வாழந்து வந்த பாணர்களுக்கு மக்கள் உணவளித்து உபசரித்த பாங்கை பெரும்பாணாற்றுப்படை வெளிப்படுத்துகின்றது.*

***பாலை நிலமக்களின் மனிதநேயம்***

*பாலை நிலத்தில் வாழும் மக்கள் செல்வம் குறைந்த வறுமையான நிலையை உடையவர்கள். வழிப்பறி செய்து அதன்மூலம் கிடைக்கும் பொருட்களால் தங்கள் வாழ்க்கையை நடத்துபவர்கள். பாலை வறண்ட நிலமாகையால் தண்ணீர் கிடைப்பது கூட அரிதாகும். இந்நிலையிலும் பசியோடு தம்மை நாடிவந்த பாணர்களுக்கு உணவளித்து அவர்களின் பசியை போக்கினர். இதனை,*

*“தெய்வமடையின் தேக்கிலைக் குவை இரும்*

*பைதீர் கடும்பொதுபதம் மிகப் பெறுகுவீர்” (பெரும். 104-105)*

*என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.*

***முல்லை நிலமக்களின் மனிதநேயம்***

*முல்லை நிலமக்கள் தம் இல்லம் நாடி வந்த பாணர்களை இன்முகத்தோடு வரவேற்று தம் நிலத்தில் கிடைக்கும் உணவுப்பொருள் மட்டுமன்றி பிறநிலங்களிலிருந்து பெற்ற நெல் முதலான பொருட்களால் சமைத்த உணவினை அளித்து உபசரித்தனர் என்பதை*

*“குறுந்தாள் வரகின் குறள் அவிழ்ச் சொன்றி*

*இன்சுவை மூரல் பெருகுவீர்” (பெரும். 193-196)*

*என்றபாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன.*

***மருத நிலமக்களின் மனிதநேயம்***

*பசி மற்றும் வறுமையில் வாடுபவர்களுக்கு மட்டுமே அதனால் உண்டாகும்; துன்பத்தை அறிந்து கொள்ள முடியும். ஆனால் மருத நிலத்தில் வாழும் மக்கள் பசி, வறுமை என்பதை அறியாத அளவிற்கு மிகவும் செழிப்புடன் வாழந்தவர்கள். இத்தகைய செல்வ நிலையிலும் வறுமையில் வாடும் பாணர்களை இயல்பறிந்து சிறப்பாக உபசரித்தனர். இதனை*

*“வினைஞர் தந்தவெண்ணெல் வல்சி*

*மனைவாழ் அளகின்” (பெரும் 255)*

*என்ற பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.*

***நெய்தல் நிலமக்களின் மனிதநேயம்***

*கடல் சார்ந்த நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் இல்லம் நாடி வந்தவர்களுக்கு பச்சை மீனுடன் தவிடு நீக்கப்படாத சத்து நிறைந்த அரிசியையும் களியாக துழாவிக் கொடுத்தனர் என்பதை,*

*“வெந்நீர், அரியில் விரல் அலை, நறுமீபிழி*

*தண்டின் சூட்டோடு தளர்தலும் பெறுகுவீர்” (பெரும். 281-281)*

*என்றபாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.*

***பாணனிடம் வெளிப்படும் மனிதநேயம்***

*சங்கப் புலவர்களின் அனுபவக் களஞ்சியமாக விளங்கும் சங்க இலக்கியங்கள் முழுவதும் மனிதநேயம் பற்றிய செய்திகள் விரவிக் கிடக்கின்றன. அவை தனிப்பாடல்களாகவும் பிறநிகழ்வுகள் பற்றிய புலவர்கள் சித்தரிக்கும் பொழுது அறிவுறுத்தல் பாங்கிலும் தம் அனுபவங்களைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளும் கூற்றிலும் புலவர்கள் இரவலரைப் புரவலனிடம் ஆற்றுப்படுத்தும் பொழுதும் எனப் பலவாறாக மனித நேயம் வெளிப்படுகின்றன.*

*நன்றாகப் பழம் பழுத்துத் தொங்குகின்ற மரங்களைத் தேடி அலையும் பறவைகளைப் போல் எங்கெங்கோ அலைந்து திரியும் துன்பம் நிறைந்தது பாணனுடைய வாழ்க்கை. தம் சுற்றத்தாருடன் இவ்வாறு அலைந்து திரிவதால் மெலிந்த பொலிவில்லாதது அவனது உடல். பசிவந்தால் பத்தும் பறந்து போகும் என்ற மரபுமொழிக்கு வலுசோப்பது போல் பசியினால் தான் கற்ற கல்வியை தானே வெறுத்துக் கூறும் வாய். இவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டு பாணன் ஒருவன் ஒரு மன்னனிடம் போய் பரிசில் பெற்று திரும்பி வருகிறான். வருகின்ற வழியில் தன்னைப் போல் வறுமையில் உழலும் மற்றொரு பாணனைக் கண்டு மனம் இரங்குகிறான். தன்னுடைய துன்பம் நீங்கியது போல பிறரின் துன்பமும் நீங்க வேண்டும் என கருதுகிறான். எனவே மற்றொரு பாணனுக்குத் தான் பொருள் பெற்றவழியைக் கூறுகிறான்.*

*“பெருவறம் கூர்ந்த கானம் கல்லெனக்*

*கருவிவானம் துளி சொரிந்தாங்கு” (பெரும். 23-28)*

*என்பதுடன் நிற்கவில்லை. நீயும் சென்று என்னைப் போல பொருள் வாங்கி வா என வழியனுப்புகிறான். இக்காலத்தில் இங்ஙனம் தன்னைப் போல பிறரும் சிறப்பாக வாழவேண்டும் என நினைப்பவர்களையும் அதற்கான வழி முறைகளையும் கூறுபவர்களைக் காண்பது அரிது எனக் கூறலாம். எவரும் தனக்கு செல்வம் சேர்ந்த வழி இன்னதென்று கூறவும் மாட்டார். ஆனால் பழந்தமிழர் எந்தவொரு செயலைச் செய்தாலும் அதை மனித நேயத்தோடு செய்தனர் என்பதை இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன.*

***அரசனின் மனிதநேய மாண்பு***

*பண்டைய தமிழகத்தில் அரசன் என்பவன் குடிமக்கள் எவ்வித குறையும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன் நல்லாட்சி நடத்தி வந்தான். குடிமக்கள் இன்பமுடன் வாழ்வதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யக் காத்திருப்பதாக பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. எத்தகைய அடித்தட்டு மக்களாக இருந்தாலும் அவர்களைத் தமக்குச் சமமாகப் பாவிக்கும் பண்பு பழந்தமிழர்களிடம் காணப்பட்டது. மக்கள் மட்டுமல்ல மன்னனும் ஏழை என்ற பாகுபாடு பாராமல் குடிமக்கள் அனைவரையும் சமமாக நினைத்து வறுமையில் உழலுபவர்களுக்கு வேண்டியதை அளித்து நல்லாட்சி நடத்தி வந்தான்.*

*‘ஆள்பாதி ஆடைபாதி’ என்பது பழமொழி. ஒருவர் உடுத்தி இருக்கும் ஆடையை வைத்தே அவரின் வாழ்க்கை நிலையை ஓரளவு அறிந்து கொள்ளலாம். அரசன் முன் நிற்கும் பாணனுடைய வறுமை நிலையை அவனுடைய ஆடை புலப்படுத்தி நிற்கின்றது. ஆகவே அரசன் தன்னை நாடி வந்த பாணனின் கந்தலான ஆடையை மாற்றி நல்ல ஆடைகளை அணியச் செய்தான். பின்னர் தாய் தன் பிள்ளையைப் பார்ப்பது போல மலர்ந்த முகத்துடன்*

கனிவுடன் பார்த்து இரவலனான நிற்கும் பாணனுக்குத் தானே முன்னின்று உணவளித்து உண்ணச் செய்கின்றான். இதனை,

“மகமுறை நோக்கி முகன் அமர்ந்து

ஆனாவிருப்பின் தான் நின்றுஊட்டி” (பெரும். 478-479)

என்றபாடல் வரிகள் மூலம் அறிந்துகொள்ளலாம்.

பாணனுக்கு வேண்டிய உணவு, உடை மட்டுமல்லாமல் பொன்னும் பொருளும் கொடுத்து உபசரித்ததன் மூலம் அரசனுடைய கொடைப் பண்பு எடுத்துக் காட்டப்படுகின்றது. இச்செய்திகளைப் பார்க்கும் போது பண்டைய மக்களிடையே காணப்பட்ட மனிதநேயத்தை அறியமுடிகின்றது.

இவ்வாறு பெரும்பாணாற்றுப் படையில் இடம் பெற்றுள்ள பாடல்கள் மூலம் மனித நேயம் பற்றியச் செய்திகளை அறிந்து கொள்ள முடிகின்றது.

**வணிகத்தில் மனிதநேயம்**

பண்டைக் காலத்தில் வணிகம் என்பது பொருள் ஈட்டுவது என்னும் நோக்கத்துடன் மட்டுமல்லாமல் உலகத்தார்க்கு உதவிட வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் மேற்கொள்ளப்பட்டது எனலாம். பல இடங்களில் விளையும் விளைப் பொருட்களை ஓரிடத்தில் கொண்டு வந்த அப்பொருட்களை கிடைக்காத வேற்றிடங்களுக்கு அனுப்புவதால் நாடு முழுவதும் மக்கள் வறுமையின்றி வாழ முடியும். இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மையுடன் தான் பழந்தமிழர்கள் வணிகத்தில் ஈடுபட்டனர் என கருதலாம்.

ஒரு இடத்தில் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களை அப்பொருள் கிடைக்கப ;பெறாத பிற இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து அங்குள்ள மக்களும் அப்பொருட்களை பயன்படுத்தும் படி செய்தனர்.

“புகர்வாய்க் குழிசி பூஞ்சுமாட்டு இரி,

நாள் மோர் மாறும், நல்மாமேனி,

……. …. ……

அளைவிலை உணவின் கிளை உடன் அருந்தி” (பெரும் 159-162)

என்றபாடல் வரியில் இடையர் மோர், தயிர் ஆகியவற்றை உற்பத்திச் செய்து இப்பொருட்கள் உற்பத்திச் செய்யப்படாத பிற இடத்திலுள்ள மக்களுக்கு கொடுத்து அந்நிலத்தில் கிடைக்கக் கூடியநெல் முதலான பொருட்களைப் பெற்று அவற்றைத் தாமும் உண்டுதம் சுற்றத்தாருக்கும் அளித்தனர் என்பதை அறியமுடிகின்றது.

சங்க இலக்கியத்தில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையின் வழி பழந்தமிழரிடம் மேலோங்கி காணப்பட்ட மனித நேயப் பண்புகளை இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. சங்க இலக்கியத்தில் மனிதநேயம், முனைவர் த. வசந்தா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். – 2-13

2. மனிதநேயம், பொன் பரமகுரு. திருவர புத்தக நிலையம் - 2001

3. தமிழர் வாழ்வும் பண்பாடும், தமிழறிஞர் சாமி. சிதம்பரனார், சாரதா பதிப்பகம். 2011.